**தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகம் - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் அவசியமாகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொள்ளப்பட்டது.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக

வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகம் செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5. நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களுடன் தொடர்புடைய இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாதிருந்ததுடன் ரூபா 62,452,454 ஆன நடைமுறையல்லாத சோத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் நிறுவகத்தின் நடைமுறையல்லாத சொத்துக்களின் ஆரம்ப மதிப்பீட்டு செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய மீள்மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைத்தன் பின்னர் நிதி அறிக்கைகளில் குறித்த சீராக்கங்கள் செய்யப்பட்டன. அதன் பிரகாரம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற நடைமுறையல்லாத பெறுமதி மீள் மதிப்பீடு | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செய்யப்பட்டன. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நிறுவனத்தினால் 03 ஆக்கஉரிமை அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 20 இன் பிரகாரம் அவற்றின் பெறுமதியை மதிப்பீடு செய்து கற்பனைச் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் ஆக்கஉரிமை அனுமதிப்பத்திரங்களின் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு அடுத்துவரும் நடவடிக்கை எடுக்கப்படும் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவகத்திற்கு உரித்தல்லாத ரூபா 900,712 ஆன 09 சொத்து விடயங்கள் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிறுவகத்திற்கு உரித்தல்லாத மற்றும் வெளி நிறுவனங்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட ரூபா 900,712 ஆன சொத்துக்கள் தொடர்பாக உரிய தரப்பினருடன் கலந்துரையாடப்பட்டு வருவதுடன் குறித்த சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும் | நிறுவகத்திற்கு உரித்தல்லாத சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க கூடாது. |
| (ஆ) | 2010 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ஆராய்ச்சி பரிசோதனை செயற்திட்டத்திற்கு செலவிடப்பட்டிருந்த ரூபா 1,097,477 ஆன கற்பனைச் சொத்துக்களாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் அதற்குப் பதிலாக நூலக புத்தகங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கான கிரயத்தை கணக்கீடு செய்வதற்குரிய கணக்கீட்டுக் கொள்கை தயாரிப்பது தொடர்பாக ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு விரைவில் சீராக்கப்படும். | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கிரயங்களுக்குரிய கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2015 ஆம் ஆண்டின் போது நிறுவனத்திற்கு காணி மற்றும் கட்டிடங்கள் ரூபா 514,800,000 இற்கு மூலதனமாக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டு வரை அம்மீள்மதிப்பீட்டு பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | அரச விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் நிறுவகத்தின் காணி மற்றும் கட்டிடக் கணக்குகளில் சீராக்கி சரி செய்யப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்களின் மதிப்பீட்டுப் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) 2006 அரசின் பெறுகை வழிகாட்டல் கோவை** | | | |
| 2.8.4 வழிகாட்டல் | தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு பரிந்துரையின்றி மீளாய்வாண்டிற்காக ரூபா 4,320,000 ஆன ஆரோக்கிய சேவைகள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் செயற்பாடுகளுக்காக உடன்படிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருந்தது. மேலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரைகள் இல்லாமல் ரூபா 451,679 கிரயமான 08 மின் உபகரணங்கள் கொள்வளவு செய்யப்பட்டிருந்தன. | இத்தவறினை ஏற்றுக் கொள்வதுடன் 2022 ஆம் ஆண்டிலிருந்து பெறுகை செயற்பாட்டினை சரியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன் | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ) சுற்றறிக்கை** | | | |
| (i) 1978 திசெம்பர் 10 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 1,083,853,325 கிரயமான நிலையான சொத்துக்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர் நிலையான சொத்துக்களுக்காக பதிவேடுகளைத் தயாரிப்பதற்கும் கணனி மயப்படுத்தப்பட்ட தகவல் பதிவேடுகளுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகளின் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தி | நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் நிறுவகத்தின் கணக்காய்வு அறிக்கையுடன் முன்னைய ஆண்டின் செயலாற்றல் உள்ளடக்கப்பட்ட ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய | கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு நிர்வாக சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள துடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, திறைசேரி, வரிசை | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| போதிலும் முன்னைய ஆண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை | அமைச்சு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களம் என்பவற்றிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 74,976,627 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 65,305,466 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 9,671,161 ஆன வீழ்ச்சியொன்றைக் காண்பித்தது. இவ்வீழ்ச்சிக்கு மீண்டெழும் மானியங்கள் மற்றும் ஏனைய வருமானம் குறைவடைந்தமை மற்றும் வழங்கல், நுகர்வுச் செலவினம் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவகத்தில் மின்தொழில் நுட்பவியலாளர் ஒருவர், இரண்டு இயந்திர செயற்பாட்டாளர்கள் மற்றும் பயிற்சி பெறாத 03 ஊழியர்கள் உட்பட இரவு நேரங்களில் நிறுவனத்தின் 03 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தும் நிறுவனத்தின் நீர் திறத்தல் மற்றும் மின் வெட்டு நேரங்களில் மின்பிறப்பாக்கி இயந்திரத்தை செயற்படுத்துவதற்காக சிற்றுண்டிச்சாலை பொறுப்பாளருக்கு 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை மாதாந்தம் ரூபா 25,000 வீதம் ரூபா 3,075,000 செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இக்கேள்விக்காக பத்திரிகை அறிவித்தல் வெளியிடும் போது முறையான வகையில் அறிவித்தல் வெளியட்டு சரியாக உடன்படிக்கை செய்வதற்கு கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது. | நிறுவகத்தின் மனித வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தவும் அரசின் பணத்தை சிக்கனமாக பயன்படுத்தவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பிற்கு ரூபா 1,958,002 தொகை கொடுப்பனவு செய்து நிறுவகத்தின் வளவில் அமைந்துள்ள காணியில் மண் பகுப்பாய்வொன்று செய்யப்பட்டிருந்த போதும் அவ்வறிக்கையின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு 03 | மண் பகுப்பாய்விற்காக தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பிடமிருந்து கிடைத்த அறிக்கையின் பிரகாரம் பக்க சுவரொன்றை நிர்மாணிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை உரிய அமைச்சின் மூலம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | குறித்த அறிக்கையின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகள் அளவிலான காலம் தாமதித்து இருந்த காரணத்தினால் நிறுவகத்தின் கட்டிடங்களின், பதவியணியினரினதும் நிறுவகத்தினை சுற்றியுள்ள ஆதனங்கள் மற்றும் பொது மக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டில் ரூபா 474,975 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த உயிரியல் தாக்கி (Bioreactor 300L) உபகரணமொன்று சபை அங்கீகாரமின்றியும் கட்டணங்கள் அறவிடப்படாமலும் தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. | இந்த உபகரணம் நிறுவகத்திற்கு மானியமொன்று (Grant) மூலம் பெற்றுக் கொண்ட ஒன்றாகும். அந்த மானியங்களை வழங்கிய நிறுவனத்தின் ஆலாசணையின் பேரில் விநியோகம் இடம்பெற்றது. 2021 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் மானியம் (Grant) மூலம் பெற்றுக்கொண்ட உபகரணங்கள் வேறாக பொருட் பதிவேட்டிற்கு உட்படுத்தப்படும். | முறையான அங்கீகாரமொன்றின் பேரில் மாத்திரம் வெளித்தரப்பினருக்கு சொத்துக்கள் வழங்கப்படல் வேண்டும் |
| (ஈ) | முறையான சாத்தியவள ஆய்வொன்று இல்லாமல் செயற்படுத்தப்பட்டிருந்த ஒன்றிணைந்த மென்பொருள் முறைமையை (intergrated software) இடைநடுவில் நிறுத்துவதற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி முகாமைத்துவ சபை தீர்மானித்திருந்த போதும் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 600,000 ஆன முற்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. . | ஒன்றிணைந்த மென்பொருள் முறைமையை நிறுவுவதற்காக தயாரிக்கப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் மென்பொருள் முறைமையின் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் முற்பணத் தொகையொன்றை கொடுப்பனவு செய்வதற்கு இணங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் முறைமையை தயாரிப்பதற்கு முன்னர் உடன்படிக்கை பிரகாரம் பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் முறைமை முறையாக செயற்படவில்லை என்பது தீர்மானிக்கும் போது முற்பணக் கொடுப்பனவு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | செலுத்திய முற்பணம் தீர்வு செய்யப்பட வேண்டும் |
| (உ) | முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் 09 உத்தியோகத்தர்களை நாளாந்தம் திகன பிரதேசத்தில் அமைந்திருந்த அரச வீடுகளிலிருந்து நிறுவனம் வரை போக்குவரத்து செய்வதற்காக மீளாய்வாண்டில் ரூபா 558,672 செலவிடப்பட்டிருந்தது. | இச்சிக்கலை எதிர்வரும் நிர்வாக சபைக்கு முன்வைத்து கட்டணங்களை திருத்துவதற்கு முறையான நடை முறையொன்றை அல்லது இப்போக்குவரத்து சேவையை தொடர்ந்து முன்கொண்டு பேணிச் செல்வது தொடர்பான தீர்மானமொன்றை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன். | இது தொடர்பாக முறையான அங்கீகார மொன்றை பெற்றுக் கொள்வதற்கும் காலரீதியில் கட்டணங்களை திருத்தம் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செயற்படுத்தப்பட்டு வந்த 18 ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்குரிய கோவைகள் மற்றும் ஆவணங்கள் கணக்காய்விற்காக சமர்பர்பிக்கப்படமையால் அச் செயற்திட்டங்களை ஆரம்பித்தல், செயற்படுத்துதல், நிதி மற்றும் நிர்வாக செயற்பாடுகள் மற்றும் செயற்திட்டங்களின் செயன் முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்காக பெற்றுக்கொள்ள முடியவில்லை. | ஒவ்வொரு செயற்திட்டத்தின் ஆரம்ப ஆண்டிலிருந்து பெற்றுக்கொண்டுள்ள பௌதீக முன்னேற்றம் மற்றும் வெற்றிகள் குறிப்பிடப்பட்டு:ள்ளதுடன் 2012 ஆம் ஆண்டு முதல் ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக இனங்காணக்கூடிய நிதிச் செலவினங்கள் இறுதிக் கணக்கின் காண்பிக்கப்பட்டுள்ளன | கணக்காய்விற்காக தேவையான அனைத்து தகவல்களும் வழங்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 47,485,576 செலவில் செயற்படுத்தப்பட்டிருந்த குவன்டம் பௌதீக விஞ்ஞான மற்றும் பிரயோக இலத்திரனியல் ("Quantum Physics and Applied Electronic") ஆராய்ச்சி செயற்திட்டத்திற்குப் பொறுப்பான விஞ்ஞானி 2020 செப்தம்பர் 02 ஆந் திகதி நிறுவகத்திலிருந்து விலகியிருந்தமையால் அச்செயற் திட்டத்தை தொடர்ந்தும் செயற்படுத்த முடியாமல் கைவிடப்பட்டிருந்தது. | "Quantum Physics and Applied Electronic" ஆராய்ச்சி நெசயற்திட்டத்தின் ஆராய்ச்சி விஞ்ஞானி 2020 பேராசிரியர் திரு. ஆசிரி நாணயக்கார செப்தம்பர் மாத்தின் போது நிறுவகத்திலிருந்து விலகியிருந்தார். அவர் விலகும் சந்தர்ப்பம் வரை அந்த ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொடர்ச்சியான ஆராய்ச்சி செயற்திட்டமொன்று இல்லாமல் இருந்ததுடன் ஆராய்ச்சி உதவியாளர் ஒருவரும் சேவையில் ஈடுபட்டிருக்கவில்லை. ஆதலால் இவர் விலகும் சந்தர்ப்பத்தின் போது மற்றொரு விஞ்ஞானிக்கு அந்நிகழ்ச்சித்திட்டம் கையளிக்கப்படவில்லை. | எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய வகையில் ஆராய்ச்சிகளை தொடர்ச்சியாக பேணிச்செல்லல் வேண்டும். |

### 3.3 நிதிய குறைப் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை செயற்திறனாக செயற்படுத்த ஒன்றிணைந்த மென்பொருள் முறைமை யொன்றை (intergrated software) ஸ்தாபிப்பதற்காக 2018 ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 6,864,960 ஆன கணனி மற்றும் கணனி உபபாகங்களுக்கு இடையே ரூபா 1,680,560 ஆன கணனி உபபாகங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரை குறைப் பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தன. | இக்கணனிகள் மற்றும் உப பாகங்கள் ஒன்றிணைந்த மென்பொருள் முறைமைக்கு மாத்திரம் கொள்வனவு செய்யப்படவில்லை. அதுவரை நிறுவகத்தின் வெவ்வேறு பிரிவுகளில் காணப்பட்ட கணனி தேவைப்பாடு காரணமாக இருந்ததுடன் தற்போது கணனிகள் மற்றும் உப பாகங்கள் அந்தந்த பிரிவுகளின் கணனி தேவைப்பாட்டிற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | கணனிகள் மற்றும் உப பாகங்களை ஆக்கபூர்வமான வகையில் பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | 04 மூலதன செயற்திட்டங் களுக்காக கிடைத்திருந்த ரூபா 36,166,934 ஆன நிதியம் குறித்த செயற்பாடுகளுக்காக செயற்திறனாக பயன்படுத்தாமல் முன்னைய ஆண்டிலிருந்து சேமிப்புக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | இந்நிதியத்தை எதிர்காலத்தில் செயற்திறனாக பயன்படுத்துவதற்கு தற்போது திட்டமிட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | நிதியத்திற்குரிய செயற்பாடுகளுக்காக செயற்தினாக பயன்படுத்த வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரையிலும் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக இருந்த போதும் அதற்காக பொருத்தமான ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்படாதிருந்ததுடன் அக் காலப் பகுதியில் நிறுவகத்தில் எந்தவொரு உள்ளக கணக்காய்வொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 02/2020 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் அத்தியவசிய வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்து உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். |